Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 164/2022 Date: 11.08.2025
Deposition of witness for prosecution: PW2 ( LW3)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | ஜெயந்தி | Village | அனுமந்தன்பட்டி |
| Father/ Husband Name | சீனிவாசன் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 41/2025 | Calling | கடைவைத்துள்ளேன் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 11.08.2025 TIME 12.25 **PM**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :-**

கடந்த 29.05.2022-ம் தேதி அனுமந்தன்பட்டி ஆஞ்சநேயர் கோவில் அருகே நான் பழக்கடை வைத்துள்ளேன். அன்றைய தினம் இரவு 10.30 மணியளவில் நான் கடையில் இருந்த போது, வடக்கிலிருந்து தெற்கு நோக்கி Splender இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் இண்டிகேட்டர் போட்டு வந்து கொண்டிருந்தார்கள். தெற்கிலிருந்து வந்த ஈச்சர் வாகனம் மேற்படி இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் அந்த இடத்திலேயே கீழே விழுந்து பலத்த காயம் ஏற்பட்டு கிடந்தார். பின்னால் அமர்ந்து வந்த பெண்மணி எனது கடையின் முன்னே சுருண்டு கீழே கிடந்தார். அவருக்கு முகம், கால் வீக்க காயம் ஏற்பட்டிருந்தது. இருவரையும் ஆம்புலன்ஸ் மூலம் உத்தமபாளையம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம். விபத்தை ஏற்படுத்திய ஈச்சர் வாகனத்தை ஓட்டி வந்து ஓட்டுநர் ஆஜர் எதிரி தான். மேற்படி வாகனங்களையும் பதிவெண் நான் கவனிக்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஜெனி விலாஸ் பெட்டிக்கடையில் வேலை செய்யவில்லை. ஜெனி விலாஸ் அருகில் நான் சொந்தமாக பழக்கடை வைத்துள்ளேன். காலை 08.30 முதல் இரவு 11.00-12.00 மணிவரை கடை வைத்திருப்பேன். என்னுடன் யாரும் வேலை செய்யவில்லை. விபத்து நடந்த இடத்திற்கும், எனது கடைக்கும் சுமார் 30 மீ தூரம் இருக்கும். சம்பவ சமயத்தில் நான், சாலையில் வழிபோக்கரிடம் பேசிக்கொண்டிருந்தேன். விபத்தை டம் என சத்தம் கேட்ட பிறகு தான் பார்த்தேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் விசாரித்தார்கள், சம்பவத்தன்றே என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரியை இன்று தான் முதல் முறையாக பார்த்தேன் என்றால் சம்பவ இடத்திலேயே பார்த்தேன். சம்பவத்தை பார்க்காமலும், சம்பவ இடத்தில் இல்லாமலும் பழ வியாபாரம் செய்வதால் போலிசார் தயவு தேவை என்பதால் போலிசார் வேண்டுகோளுக்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தில் தடுப்பு சுவர் உள்ளதா

என்றால் இல்லை. விபத்து நடந்த இடத்தில் தடுப்பு சுவர் உள்ளது என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

ஓம்/திரு.P. காமராசு
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 164/2022 Date: 11.08.2025
Deposition of witness for prosecution: PW3 ( LW6)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜீவ் கண்ணா | Village | அனுமந்தன்பட்டி |
| Father/ Husband Name | துரைசாமி | Taluk | உத்தமபாளையம் |
| Age | 49 /2025 | Calling | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 11.08.2025 TIME 12.35 **PM**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :-**

என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1-வதுசாட்சி கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜரில் உள்ள 1-வதுசாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆகும். கடந்த 30.05.2022-ம் தேதி நான் காலை 07.00 மணியளவில் அனுமந்தன்பட்டி ஆஞ்சநேயர் கோவில் அருகே உள்ள ஆண்டாள் டீ கடையில் நான் இருந்தபோது, போலிசார் அங்கு வந்து விபத்து வழக்கு சம்மந்தமாக வரைபடம் வரைந்தார்கள் அதில் சாட்சியாக நானும், முத்து என்பவரும் கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எந்த வழக்கு எண் குற்றத்திற்காக நான் கையொப்பம் செய்தேன் என எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.